உ

குமாரகுருப்யோகம:

மயிலாசல

# முருகன் துதி



இஃது

ஸ்ரீ சிவசுப்ரஹ்மண்யக்கடவுளின் அடியவர்க்கடிமை

பக்தசிரோமணி

சிதம்பரம்

## கு. நயினநாடார் அவர்களால்

இயற்றியதை

ஷெ யூர்

ஜே. சிவப்பிரகாசம்பிள்ளையவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீ ஜ்[illegible]னசம்பந்தவிலாஸ ப்ரெஸில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

[காபிரைட்] 1924 [விலை அணா 1]

120

1924

இ2:417
N24

உ

குமாரகுருப்யோநம:

மயிலாசல

# முருகன் துதி.



இஃது

ஸ்ரீ சிவசுப்ரஹ்மண்யக்கடவுளின் அடியவர்க்கடிமை

பக்தசிரோமணி

சிதம்பரம்

## கு. நயினுநாடார் அவர்களால்

இயற்றியதை

ஷை யூர்

ஜெ. சிவப்பிரகாசம்பிள்ளையவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீஜ்ஞானசம்பந்தவிலாஸ ப்ரெஸில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

[ரிஜிஸ்டர் காபிரைட்] 1924 [விலை அணா 1]

# முக்கிய அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் சிதம்பரம் நாட்டுப் பிள்ளைதெரு 24 நெம்பர் வீட்டிலிருக்கு ஜெ. சிவப்பிரகாசம்பிள்ளை அவர்களிடப்பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

உ

குஹப்ரஹ்மணே நம:

# மயிலாசல முருகன் துதி.

## விநாயகர் துதி.

(மாமயில் வாகன) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

நீயருள்புரிகுவாய் திருமலஸ்ரீகணபதி (நீ)
உபாயமானவழியைக்காட்டிடும்
உபயகமலபதத்தைப்புகழ (நீ)

மாதவாமாதவன் மருகனுக்குமூஷிகா
மாமணிச்சுடர்விளங்கும்பாதனே
மகிழும்வல்லபையணைவிநோதனே (நீ)

தேவாதிதேவனே தேவர்தொழுஞ்சீபாதனே
திருமால்சக்கரம்பெறவும்வேண்டியே
ஒருசாரிருந்துகோணங்கிபாட்டிய (நீ)

---

## முருகன் துதி.

(மையலைத்தீர்த்தசெல்லையா,) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

மயிலைக்கந்தவேலையா எந்தனை
வந்தேதயாளையா (ம)

சரணம்.

எந்தவிதமானகுற்றம் எளியேன்செய்திருந்தாலும்
சொந்தமைந்தன்எனநினைந்து
சுறுக்காயெனக்குன்
பதத்தையருளும் மா (ம)

நாதாந்தமுடிநடமே நாதகுருபரசிவமே
வேதாந்தபெருந்தவமே
வினையேன்சிறியேன்
எனையுமணைதிமா (ம)

வள்ளிதெய்வயானைலோலா வாதுளன்மேலேனேவேலா
புள்ளிமயிலேறுஞ்சீலா
புனிதவடியைப்
பணிந்தேன்நாயினை (ம)

(மாமதனுமையல்தீர) என்றவர்ணமெட்டு

பல்லவி.

மாமயிலைக்கந்தநாதா வந்தருள்செய்வாய் — தேவா (மா)

அநுபல்லவி.

நீமயிலின்முதுகிலேறி
ஒய்யாரமாய்
ஐயாஎன்முன் (மா)

சரணம்.

காலமுமையையோவிணிலேபோகுது
காலன்வரிற்றீது காமமுங்காயுது
மேலவுன்னுவிது ஆனதுகாணிது
மெத்தவருத்திடுசித்தமொ
டொத்துவினைப்பயனைத்தனை
யத்தனைக்கும் பாவியான
பித்தனென்னை யாளகாக்க
வேடிக்கைபார்த்துக்கொண்டிருப்பதுன்
வாடிக்கையோசாயினுமுனம் (மா)

(ஓடியாலுலகை.) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

காவடிவேலவனே கந்தநாதனேசிமானே (கா)

அநுபல்லவி.

மாவடிவாயுலகமடங்கலுந்தனதடியிலடக்கி
மாதுடன்நடமாடுவானழ (கா)

மாவடிவாயுலகமுழுவதுந்தனதடியிலடக்க
மூத்தவன்மருகாதவமுரு (கா)

மாவடிவாயுலகமுழுவதும்புகழ்பரவவடியர்
தொழுதுபணிந்துதூக்கிடும்பால் (கா)

சரணம்.

நந்தாநளினமலர்ப் பாதாயீரைந்திரண்டு
காதாயெளியேன்முறைகேட் காதாயின்னமும்வாதா
நாளுமுந்தனையே பணிந்
தாடுமெந்தனையே
நலியாதனைத்துடனேயருள்
புரிவாயெனுமயிலுறைவேலனைக் (கா)

---

(எனை மறந்தனையோ) என்றமெட்டு

கண்ணிகள்

மயிலேச்சண்முகனே மா
கயிலையன்மகனே

அடி

யாருடன் துதி யேபுரியெனைக்
காருமென்கலி தீரும்சிற்பர (ம)

தாமரைப்பதமே எனக்குந்
தாமறைப்பாதமே

தன்னைத்

தானுணர்ந்திடும் ஞானியர்மனம்
கோயில்கொண்ட குஹேசனேதெய்வ (ம)

நறுமலர்க்கருவே பாடும்
நயினுவின் குருவே

எந்
நாளுமுந்தனையேவணங்கிடு
மாறுமின்னருளைத்தந்துதவும் (ம)

---

(தருணமீதம்மா) என்றமெட்டு

பல்லவி

மயிலைநாதனே • வள்ளி
மகிழ்விநோதனே வேல(ன்) (மா)

அநுபல்லவி

கயிலைநாதனும் சிவன் களிக்கும்பாலனே
ஒயிலாய்மயின்முதுகில் தெய்வ
யானைபாகனும் — வேல (ன்) (ம)

சரணம்.

மலையத்துவஜன் குலத்தைவிளக்கும்மாணிக்கவிளக்காம்
மாதவரிருதயத்தில்நடிக்கும்மறுவிலா முருகாம்
கலைவலோர்புகழ்குகக் கந்தவேளனே
கனிவாய்த்துதி புரிநாயினேகவலைதீர்த்தருள்தேவ (ம)

---

(முருகேசனைத்தினம்) என்றமெட்டு

கண்ணிகள்.

வடிவேலனே ஓடிவாவா
மைந்தன்என்கலியை தீர்ப்பாயே தேவா (வ)
அடியேனுலகில்படுந்துன்பம்
ஐயாநீயறியாயோ ஓ தேவா (வ)
கதிவேறுண்டோகுஹேசா
காப்பாற்றுவாய்பவநாசா கதிரேசா (வ)
இனிநானுனைமறக்கமாட்டேன்
எனக்கேநீயருளவேண்டும் ஓ தேவா (வ)
மயிலாசலனேகுஹதேவா
மாயுமுனம்நாயினைக்காப்பாயே தேவா (வ)

(முருகாநீவந்து) என்றமெட்டு

பல்லவி

மனமேமோனமுன்தெரிசிக்கச் செல்லுவோம்
மயிலைமுருகன் திருவடிமலரை (ம)

அநுபல்லவி

தேனைப்போன்றவெனதுகண்மணியைத்
தெவிட்டாவின்பத்தீஞ்சுவையமுதை (ம)

சரணம்

திருமால்பிரமன் இந்திரன்முனிவர்
தேவர்போற்றத்திருச்சபைதனிலே
உருவாயருவாய் நிர்த்தனமிடுமெம்
உத்தமனருளியவித்தகவடிவை (ம)

ஆணிப்பொன்னை அடியாருளத்தில்
ஆடுந்துணையை அரியைவிதியை
நாணிக்கொளபுகழுடையநங்கோவை
நயந்துபுகழ்ந்துஇருந்துபணிந்து (ம)

179855

காதற்கினியகனியையமணியைக்
கவலைதவிர்க்கும்மருந்தைவிருந்தை
ஓதற்குரியவிந்நயினுபுகழுந்
தீதற்றிடுபரமேசக்களியை (ம)

---

(குமாதரு) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

மயிலமலைமேவும்சுப்ரஹ்ம — மண்யன்மண்யன் — மலை
பாதுபெற்றெடுத்தணைலா — வண்யன்வண்யன் — கானிற்

குயில்மொழிவள்ளிபணையும் — கண்யன்கண்யன் — உயர்
கந்தவேள்குகன்னமதா — புண்யன்புண்யன் — திரு(ம)

சூரனைசங்காரஞ்செய்க வேலன்வேலன் — வானிற்
சுரிகுழற்குஞ்சரிமகிழும் லோலன்லோலன் — ஒய்
யாரன்மாமயிலில்வரும் கோலன்கோலன் — என்று
முத்தமர்வணங்குந்தலை மேலன்மேலன் — திரு (ம)

தாசருள்ளத்தேதமிலிரும் பாதன்பாதன் — பரந்
தாமன்மருகோன்மறைக்க நீதன்நீதன் — தொழு
யீசர்க்குபதேசித்தமா போதன்போதன் — பணிந்
நாடுமிச்சிறுநயினை நாதன்நாதன் — திரு (ம)

---

## மங்களம்.

(மயிலே எனக்குந்தன்.) என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

மயிலாசலனுக்கு ஜெய மங்களம் .... நல்ல
மாதுவள்ளிகுஞ்சரிக்குசுபமங்களம் (ம)

### அநுபல்லவி.

கயிலாசலனுக்குங்கந்தன் தாய்பார்வதிக்கும்
இயலாய்மூஷிகமேறும்வரம்பர்க்கும்மங்களம் (ம)

### சரணம்.

ஈசனவதாரங்களனைத்தனைபோவத்தனைக்கும்
ஈனாறியாபாதமேத்தித்துதிப்பவர்க்கும்
மோசமில்லாதமோட்சவீட்டையாள்பவருக்கும்
முந்தும்தாசர்க்கும்நயினைகவிக்கும்நித்யமங்களம்

மயிலாசலமுருகன்துதி

முற்றிற்று.